விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 220 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 11 புதன்கிழமை (27.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=


## முன்பதிவு செய்வோருக்கு மாத்திரமே கடவுச்சீட்டு

(கொழும்பு)

கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக இணைய வழியில் காலம் மற்றும் திகதியினை முற்பதிவு செய்பவர்களுக்கு மாத்திரம் இன்று முதல் சேவை வழங்கப் 11

## நாட்டின் பொருளாதார நிலைமை, இரு தரப்பு உறவுகள் தொடர்பாக

### இந்தியத் தூதுவர் ஜே.வி.பியுடன் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் இரு நாட்டு உறவுகள் தொடர்பாக இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக் கும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வுக்கும் இடையில் கலந்துரை யாடல் ஒன்று இடம்பெற்றுள் ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக் கும் மக்கள்விடுதலை முன்னணியின் 11


## போராட்டக்காரர் விமானத்தில் வைத்து கைது

(கொழும்பு)

விமானம் ஊடாக டுபாய் நோக்கிப் பயணிக்க தயாராக இருந்த காலி முகத்திடல் போராட்டக்காரர்களில் ஒரு வர் சி.ஐ.டியினரால் நேற்று கைது செய்யப்பட் டுள்ளார். 11

# பொருளாதார மீட்சிக்கு இந்தியா உதவும்

## ரணிலுக்கான தாமத வாழ்த்தில் இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு


(கோப்புப் படம்)

(புது டில்லி)

அரசியலமைப்பு கட்டமைப்பின் மூலம் ஸ்திரத் தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கான இலங் கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உறுதுணையாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான வாழ்த்துக் கடிதத்தில் இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவு செய் யப்பட்டுள்ள ரணில் விக்கிரம சிங்கவிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து கடி தம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் ஸ்திரத்தன்மை மற் றும் பொருளாதார மீட் சிக்கு இந்தியா 11

வல்வெட்டித்துறையில்

## குளவி கொட்டியதில் குடும்பப் பெண் மரணம்

### விறகு எடுக்கச் சென்றபோது சம்பவம்

(கரணவாய்)

விறகு எடுக்கச் சென்றபோது கருங்குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஈஸ்வரி பாஸ்கரன் (வயது- 60) என்பவரே 11

## கொரோனா

## +5 பேர் மரணம் +119 பேருக்கு தொற்று

### 10 நாட்களில் 600 தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 10 நாட்களில் 600க்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஒரு நாளில் 119 பேருக்கு தொற்று 11

## இரு நாடுகளுக்குமிடையிலான நேரடி முதலீடுகள் தொடர்பில்

### பிரதமர் - இந்திய உயர்ஸ்தானிகர் கலந்துரையாடல்



(கொழும்பு)

இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான நேரடி முதலீடுகள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த் தனவுக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் கலந்துரையாடல் 11

ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல்

## முடிவுக்கு வருகின்றது எரிவாயுவுக்கான வரிசை

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் முத லாம் திகதி முதல் மக்கள் வரிசையில் நிற்காமல் எரி வாயுவை தட்டுப்பாடு இன்றி பெற்றுக்கொள்ள முடியும் என லிட்ரோ நிறுவனத்தின் தலை வர் அமைச்சரவைக்கு அறி வித்துள்ளதாக அமைச் சரவை பேச்சாளர் 11

கோட்டாவை பதவி விலத்தும்

## போராட்ட பின்னணியாக சந்திரிகா செயற்பட்டார்

### விமானப் படை முன்னாள் அதிகாரி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக வைக்கும் போராட்டத்தின் பின்னணி யில் மூளையாக செயற்பட்ட வர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க 11

## இலங்கை தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்

### பொருளாதார நிபுணர்களிடம் அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

தற்போதைய நெருக்கடி நிலையில் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க தீர்க்கமான நடவடிக்கை எடுக்க [illegible] இலங் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போராட்டக்காரர்களை கைது செய்வதை உடன் நிறுத்துக

## ரணிலிடம் அநுர கோரிக்கை

(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டக் காரர்களை கைது செய்வதையும் ஒடுக்குவதையும் நிறுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நேற்று அரசாங்கத் திடம் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தை கையளிப்பதாக உறுதியளித்த போதிலும் போராட்டக்காரர்கள் மீது கடுமையான தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயுதப்படைகளைப் பயன்படுத் தினார்.

ரணிலை ஜனாதிபதி ஆக்குவதற்கு வாக்களித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களை மகிழ்விப்பதற்காக இந்த தாக்குதல் நடத்தப் பட்டதாக அநுரகுமார குறிப் பிட்டார்.

"காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குப் பிறகும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, போராட்டக்கா ரர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்கிறது.

பல்வேறு இன்னல்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றாக்குறையால் உருவான பொதுமக்களின் போராட்டத்தின் காரணத்தை அரசாங்கம் உணர வில்லை.

எனினும் அடக்குமுறை மூலம் மக்களின் நியாயமான கோரிக்கை களை அரசாங்கம் தடுக்க முயற் சிக்கிறது என்று அவர் குற்றம் சுமத் தினார். (ம)

## எரிபொருள் பங்கீடு

| | |
|---|---|
| **பெற்றோல் வாகனங்கள்** | |
| மோட்டார் சைக்கிள் | - 04 லீற்றர் |
| முச்சக்கரவண்டி | - 05 லீற்றர் |
| வான் | - 20 லீற்றர் |
| கார் | - 20 லீற்றர் |
| பிற வாகனங்கள் | - 15 லீற்றர் |
| **டீசல் வாகனங்கள்** | |
| லொறி | - 50 லீற்றர் |
| பேருந்து | - 40 லீற்றர் |
| முச்சக்கரவண்டி | - 05 லீற்றர் |
| வான் | - 20 லீற்றர் |
| கார் | - 20 லீற்றர் |
| பிற வாகனங்கள் | - 15 லீற்றர் |

### ரணிலுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்

# சர்வகட்சி அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை

## மனோ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில்; அரசிடமிருந்து எமக்கு இதுவரை அதிகார பூர்வ அழைப்பு எதுவும் வரவில்லை. ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் அதிகார பூர்வ அழைப்புகள் வரவில்லை. ஆகவே, அதற்குள் "பேச்சுகள் நடக் கின்றன, அமைச்சர்கள் ஆகிறார்கள்" என்பவையெல்லாம் வெறும் சுவார சிய செய்திகளாக மட்டுமே இருக்கி ன்றன.

ஆனால், நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ரணில் விக்கிர மசிங்க அரசுக்கு நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களைச் செய்யக்கூடாது" இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங் களுக்கு நேற்று தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது,

"தேசிய அரசு அல்லது சர்வ கட்சி அரசு அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவி ல்லை. ஆனால், கட்சி தலை வர்கள் கூட்டத்தின்போது, ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க என்னிடமும், ஏனைய கட்சி தலைவர்களிடமும் நேரடியாக இது பற்றி கூறினார். ஆனால், கட்சிகளுக்கு சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசிட மிருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவேண்டும்.

அதன் பிறகு நாம் எமது கட்சி கள் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழுக்கள் மத்தியில் இதுபற்றி பேசுவோம். அதேபோல் ஐக்கிய மக்கள் கூட் டணி தலைமைக் குழுவிலும் பேசுவோம். இதுதான் ஒரு பொறுப்புள்ள நேர்மையுள்ள ஜனநாயக அரசியல் கட்சி செய்ய வேண்டிய முறைமை. அதை நாம் செய்வோம். எமது முடிவு களை எமக்கு வாக்களித்து தெரிவு செய்துள்ள எமது மக்களின் நலன்களை முன்னிட்டு நாம் ஒற்றுமையாக எடுப்போம்.

அதேவேளை, நாடு இன்று இருக்கும் அவதி நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு நாட்டை இயல்பு நிலைக் குக் கொண்டுவர அவகாசம் கொடுக்க வேண்டும். அவசரப் பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட் டங்களை செய்யக்கூடாது. அதுவே எங்கள் மக்களின் நிலைப்பா டாகவும் இருக்கின்றது. பெரும் பான்மை அரசியல் கட்சிகளின் நலன்களைச் சார்ந்து மாத்திரம் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் செய்யாது என்றார். (ம)


உ
சிவசக்தி போற்றி

யாழ்ப்பாணம் நல்லையம்பதி
**சிங்காரவேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானம்**

**ஆடி அமாவாசை தர்ப்பண வழிபாடு**
**விஞ்ஞாபனம் - 28.07.2022 வியாழன்**

மெய்யடியார்களே!

நல்லூர் வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் ஈஷான பாகத்தில் அமைந்துள்ள சிங்காரவேலவன் சிவகாயத்திரி ஆலயத்தில் ஆடி அமாவாசை தினமான 28.07.2022 ஆம் திகதி அன்று காலை 6.00 மணி முதல் இறந்த மூதாதையர் களின் ஆத்ம சாந்தி வேண்டி நெய் தீபம் ஏற்றி, மோர்ச்சார்ச் சனை செய்து தர்ப்பணம் செய்து கொள்வதற்கு தேவஸ்தானத் தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. குறித்த வழிபாடுகளில் பங்காற்றி ருத்ரலிங்கேஸ்வர பெருமானினது திருவருளைப் பெற்றுய்வதோடு பிதிர் தோஷம் நீங்கிக் கொள்வீர்களாக.

குறிப்பு : அன்றைய தினம் அடியவர்களுக்கு தர்மா பௌன்டேஷன் பங்களிப்போடு அன்னதானமும் வழங்கப்படும்.

தெளிவே எம் சிந்தனை

இங்ஙனம்
**இராஜ ஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்**
முதன்மை பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்,
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்.

நல்லையம்பதி சிங்காரவேலவன் சிவகாயத்திரி சந்நிதானம்.

(C-4662)



kmf
KILINOCHCHI MARATHON FESTIVAL

அபியகம் இன்
# KILI MARATHON FESTIVAL - 2022
# கிளி மரதன்

**2022.08.07 காலை 7.00 மணி**

**இரணைமடுவில் இருந்து பரந்தன் வரை**
( சுப்பிரமணியம் இராசம்மா மணி மண்டபம் )

விண்ணப்ப முடிவுத் திகதி 03.08.2022

**ஆண்கள் & பெண்கள்**

ABIYAKAM அபியகம்

KILI PEOPLE

- முதலாம் பரிசு 100,000.00
- இரண்டாம் பரிசு 50,000.00
- மூன்றாம் பரிசு 25,000.00

- முதல் மூன்று இடங்கள் தவிர்ந்த அடுத்த ஐந்து இடங்களைப் பெறும் ஆண், பெண் வீர, வீராங்கனைகளுக்கு தலா 5,000/= ஆறுதல் பரிசுகள்.
- முழுமையாக ஓடி முடிப்பவர்களுக்கு தலா ரூபாய் 1,000.00 வீதம் வழங்கப்படும்.

**போட்டியாளர்கள் 31.12.2021 ஆம் திகதி ஆண்கள் 17 வயது, பெண்கள் 15 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.**

- ◆ ஆண்களுக்கு 22 km, பெண்களுக்கு 15 km ஓட்டத் தூரம்
- ◆ போட்டித் திகதிக்கு முன்பதாக 6 மாதத்திற்குட்பட்ட மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் ( ECG REPORT )
- ◆ வெளி மாவட்ட போட்டியாளர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
- ◆ போட்டியாளர்கள் வட மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டிருக்க வேண்டும்.



மேலதிக விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு
**077 393 3257, 077 646 9319, 077 147 3519**
Kili.marathan@gmail.com

நிதி அனுசரணை
**ABBY RETAIL LTD UK**

(C-4663)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வெட்டு நேரம் மேலும் அதிகரிக்கப்படலாம்

## மின்சாரசபை எச்சரிக்கை

(கொழும்பு)

**நாளாந்த மின்வெட்டு நேரம் மூன்று மணித்தியாலங்களை விடவும் விரைவில் அதிகரிக்கப்படலாம் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் தொழிற்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

மின்சாரத்தை இடையறாது விநியோகம் செய்வதற்கு போதியளவு எரிபொருள் கிடைக்கவில்லை என தெரிவித்து நேற்று முன்தினம் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மின்வெட்டு நேரம் மூன்று மணித்தியாலங்களை விடவும் நீடிக்கப்படும் சாத்தியங்கள் வெகு அதிகம்.

மக்கள் நினைப்பதனை விடவும் மின்வலு துறையில் பாரிய நெருக்கடி நிலைமைகள் காணப்படுகிறது.

அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொள்ள முனைப்பு காட்டப்படுவதாகவும், மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

# கோட்டா விரைவில் நாடு திரும்புவார்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமறைவாகவில்லை எனவும், சிங்கபூரில் இருந்து அவர் விரைவில் நாடு திரும்புவார் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (நி)

# சீனா செல்ல ரணில் திட்டம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவுக்கு செல்ல திட்டமிட்டுள்ளார் என சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹொன தெரிவித்துள்ளார்.

வர்த்தகம் முதலீடு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடுவதற்காக அவர் சீனாவிற்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

மேலும் கொழும்பிலும். அம்பாந்தோட்டையிலும் சீனாவின் ஆதரவுடன் கூடிய பரந்த துறைமுகத் திட்டங்களுக்கு மேலதிக முதலீட்டை மேற்கொள்வதன் மூலம் சீனா இலங்கைக்கு உதவ முடியும் என இலங்கை தூதுவர் பாலித கொஹொன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீனா தொடர்பில் புதிய அரசாங்கத்தின் கொள்கையில் எந்த அடிப்படை மாற்றமும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# மக்களுக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி வழங்குங்கள்

## சுகாதாரத்துறை அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கான செயற்றிட்டத்தை முறைப்படி முன்னெடுக்குமாறு சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.


மருந்து இறக்குமதியை நிர்வகிப்பது தொடர்பில் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மருந்து உற்பத்தியை விரைவுபடுத்துவதற்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதால், அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி அதற்கான நடைமுறைகளை தயாரிக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

உலக வங்கியினால் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் டொலர்களில் இதுவரை 18.6 மில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளது. (நி)

# எரிபொருள் விலை குறைவடையலாம்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

எதிர்காலத்தில் எரிபொருள் விலை குறைவடையக்கூடும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் தற்போதைய விலை நிலவரத்தின் படி எதிர்காலத்தில் எரிபொருள் விலை மேலும் குறைவடையும் வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் அடுத்த எரிபொருள் விலைத் திருத்தத்தின் மூலம் எரிபொருள் விலை குறையக் கூடும் என எதிர்ப்பார்க்கப்படுவதாக, அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் 1 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருட்களின் விலையில் மாற்றங்களை அறிவிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எரிபொருட்களுக்கான விலைகள் குறைக்கப்படுமாக இருந்தால், அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகளும் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

# மீண்டும் அதிகரிக்கும் கொவிட் மரணங்கள்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கொவிட் மரணங்கள் அதிகரித்து வருவதை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகள் வெளிக்காட்டுகின்றன.

அதன்படி நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

60 வயதிற்கு மேற்பட்ட ஆண் ஒருவரும் பெண்ணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாத்திரம் 75 புதிய கொவிட் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நாட்டின் தற்போதைய கொவிட் 19 பரவலை கருத்திற்கொண்டு மீண்டும் முகக்கவசங்களை அணியுமாறு சுகாதார அமைச்சு கடுமையாக பரிந்துரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது, (நி)

# ஆட்டோக்களுக்கான எரிபொருளுக்கு பிரத்தியேக நிரப்பு நிலையங்கள்

(கொழும்பு)

முச்சக்கரவண்டி சாரதிகள் தமது பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்தில் பதிவினை மேற்கொண்டு, எரிபொருள் பெறுவதற்கான ஒரு நிரப்பு நிலையமொன்றை ஒதுக்கிக்கொள்ளுமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரியுள்ளார். டுவிட்டர் பதிவொன்றினூடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில், எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான பதிவினை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே எரிபொருள் பெற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விவசாய உபகரணங்கள், மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய உபகரணங்களை பயன்படுத்துபவர்கள் அந்தந்த பிரதேச செயலகங்களில் பதிவு செய்ய முடியும்.

தங்களது வாராந்த எரிபொருள் தேவை தொடர்பான தகவல்களுடன் இவ்வாறு பதிவு செய்து ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும்.

செஸி எனப்படும் அடிச்சட்ட இலக்கம்மூலம் QR முறைமையை பதிவு செய்ய முடியாத வாகன பயநர்கள், வெள்ளிக் கிழமை முதல் வாகன வருமான வரி அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி பதிவு செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022

# 14 ஆவது தகுதி காண் போட்டியில் விங்ஸ் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் 14 ஆவது தகுதிகாண் போட்டியில் விங்ஸ் அணி யூனியன்ஸ் அணியை 55 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது.

மைக்கல் -73, திரோன்-43, அணஸ் ராஜ்-27, ராஜ் போவ் -21, சியோன்- 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யூனியன்ஸ். அணியைச் சார்ந்த டிமஸ்ரன் 10 ஓவர்களில் 41 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பிரவீன்ந் 10 ஓவர்களில் 40 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 34.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

அனன்ராஜ்-57, பிரசாந் தன்-31, சுயாந்தன்-29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விங்ஸ் அணி சார்பாக சியான் 10 ஓவர்க ளில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், மைக்கல் 4 ஓவர்களில் 54 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு நிகழ்விற்கு (RATING) விங்ஸ் அணி 9.01 புள்ளிகளையும் யூனியன்ஸ் அணி 2.91 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4)


# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம் - 2022

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைக்கு கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. இவ் வேலைத்திட்டம் தொடர்பில் 04/2016 (ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பின்பற்றப்படும். அத்துடன் 03/2020 ஆம் இலக்க 09.10.2020ஆந் திகதிய, 03/2020 (I) ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளும் பின்பற்றப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. கோரப்பட்ட வேலைக்கு தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி **021 225 5381**) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் என்ற இடத்திலிருந்து 27.07.2022ம் திகதி தொடக்கம் 09.08.2022ம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 9.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீக்கலாக) செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.
07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 10.08.2022ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாக போடப்படுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கோரப்பட்ட வேலைக்கான கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து எழுபத்து ஏழு நாட்களாகும். (25.10.2022ம் திகதி வரையாகும்).
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்தில் கொங்கிறீற் தூண்வேலி அமைத்தல், கல்லூண்டாய் NP/14/41(16)/W/CF/2022/05 | 3.77 | 60 நாட்கள் | C8 &C7 (கட்டடம்) | 37,700.00 | 22.11.2022 |
| 02 | காக்கைதீவு சுடலை வீதி மதகு புனரமைத்தல் NP/14/41(16)/W/CF/2022/06 | 0.88 | 60 நாட்கள் | C8 &C7 (கட்டடம்) | 8,900.00 | 22.11.2022 |
| 03 | பிப்பிலி மயானம் புனரமைத்தல், மானிப்பாய் NP/14/41(16)/W/CF/2022/07 | 2.03 | 60 நாட்கள் | C8 &C7 (கட்டடம்) | 20,300.00 | 22.11.2022 |

11. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 04.08.2022ம் திகதியன்று பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

**அ.ஜெபநேசன்**
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.
27.07.2022. (C-4661)


# டோனியின் சாதனையை முறியடித்த அக்சர்



மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டியில், அக்சர் படேல் அதிரடியாக விளையாடி டோனியின் சாதனையை முறியடித்துள்ளார்.

ட்ரினிடாடின் குயின்ஸ் பார்க் ஓவல் மைதானத்தில் நடந்த இரண்டாவது ஒரு நாள் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயித்த 312 ஓட்டங்கள் இலக்கை நோக்கி இந்திய அணி களமிறங்கியது.

துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக செயற்பட்ட போதிலும், ஒரு கட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுகளை இழந்து தவித்தது. அப்போது ருத்ர தாண்டவம் ஆடிய அக்சர் படேல் சிக்ஸர்களை பறக்கவிட்டார்.

இறுதிவரை களத்தில் நின்ற அவர் 35 பந்துகளில் 64 ஓட்டங்கள் விளாசினார். இதில் 5 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அடங்கும். அவரது ஆட்டத்தினால் இந்திய அணி 49.4 ஓவர்களிலேயே இலக்கை எட்டித்ரில் வெற்றி பெற்றது.

சிக்ஸர்களை பறக்கவிட்டதன் மூலம் டோனியின் முக்கிய சாதனை ஒன்றை அக்சர் படேல் முறியடித்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் இந்திய அணியின் சேஸிங்கின் போது, 7 ஆவது இடத்தில் அல்லது அதற்கு அடுத்த இடங்களில் களமிறங்கும் வீரர்கள் அதிக சிக்ஸர்கள் விளாசியதில்லை.

2005 ஆம் ஆண்டு ஜிம் பாப்வே அணிக்கு எதிராக டோனி 3 சிக்ஸர்கள் அடித் தார். அவரைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டில் யூசுப் பதான் இரு முறை 3 சிக் ஸர்களை பறக்கவிட்டு, டோனியின் சாதனையை சமன் செய்தார். இந்த நிலையில் தான் அக்சர் படேல் 5 சிக்ஸர்கள் விளாசி புதிய சாதனை படைத்துள்ளார்.

மேலும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக 2 ஆவது அதிவேக அரை சதம் அடித்த வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். அவர் 27 பந்துகளில் அடித்த அரைசதம் தான், அவருக்கு முதல் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் அரைசதம் ஆகும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 470 கிராம் தங்கம் கடத்த முற்பட்ட மூவர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் பேசாலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது நாட்டிலிருந்து கடத்த முயன்ற சுமார் 470 கிராம் தங்கம் மற்றும் வலம்புரி சங்கு என்பன கைப்பற்றப்பட்டன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் ஈடுபட்ட 3 சந்தேக நபர்களையும் அந்தப் பொருட்களை கடத்த பயன்படுத்திய டிங்கி படகையும் கடற்படையினர் கைது செய்தனர்.

இதற்கிடையில் இந்த நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட தங்கத்தின் சந்தை மதிப்பு ரூ. 9 மில்லியன் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 24 முதல் 39 வயதுக்குட்பட்ட புத்தளம் மற்றும் பேசாலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள், தங்கம், சங்கு மற்றும் படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள சுங்க அலுவலகத்தில் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (4-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 240 | 280 |
| உருளைக்கிழங்கு | 240 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 600 |
| தக்காளி | 300 | 350 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 240 |
| கோவா | 360 | 300 | 360 |
| கரட் | 280 | 350 | 400 |
| பூசணி | 200 | 160 | 200 |
| புடோல் | 160 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 380 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 700 | 300 | 600 |
| வெண்டக்காய் | 120 | 100 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 280 |
| பயற்றங்காய் | 250 | 300 | 400 |
| லீக்ஸ் | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 280 | 200 | 300 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 450 |
| போஞ்சி | 400 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 90 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 280 | 200 | 400 |
| முள்ளங்கி | 160 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 150 | 150 |

# வவுனியாவில் சிறுபோக அறுவடைக்கான டீசல் விநியோகம் தொடர்ச்சியாக முன்னெடுப்பு

(நெளுக்குளம்)

வவுனியாவில் சிறுபோக நெல் அறுவடைக்குரிய டீசலினை கட்டம் கட்டமாக வழங்கும் செயற்பாடு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 12 ஆயிரத்து 238 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஜூலை முதல் கிழமையில் இருந்து ஓகஸ்ட் கடைசிக் கிழமை வரை சிறுபோக நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இதற்காக கிட்டத்தட்ட 3 இலட்சத்திற்கு மேலதிகமான டீசல் எரிபொருள் தேவைப்படுகிறது. இதனை வாராந்தம் பகிர்ந்து வழங்குவதற்குரிய நடவடிக்கையை மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திரவின் வழிகாட்டலின் பேரில் கமநல அபிவிருத்தி உதவிஆணையாளர்நே.விஸ்னுதாஸனின் மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் தற்போது வரையான காலப்பகுதியில் 6040 ஏக்கரிற்குரிய 61156.25 லீற்றர் டீசலினை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 8 கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளிற்கு வழங்கப்பட்டுள்ளது.(4-299)

# கிளிநொச்சியில் செல் மீட்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பரந்தன் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றில் மரத்தின் கீழ் மண்ணில் புதையுண்ட நிலையில் இரண்டு எறிகணை செல்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.


குறித்த இரண்டு எறிகணை செல்களும் நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக



கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-316)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

27.07.2022



மண்ணில் 26 . 03 . 1966

விண்ணில் 07 . 08 . 2021

அமரர்.திரு.

## இரத்தினசிங்கம் பாலகிருஷ்ணன்

ஆண்டொன்று ஆனாலும்  
ஆறாது உங்கள் அரும் நினைவு  
ஆருயிரே எங்கள் அருட்கடலே  
ஆண்டவன் அடியினிலே அமர்ந்து இருந்து  
அருள் தொண்டு செய்து வர சென்றீரோ  
தாய் இழந்த கன்றுகள் போல் உங்கள்  
தயவு இழந்து வாடுகிறோம்  
தயவு கூர்ந்து தரணியிலே  
பிறப்பெடுத்து வந்துருய்யா

(12262)

சுப்பர்மடம், பருத்தித்துறை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

# நெல்லை உரிய முறையில் களஞ்சியப்படுத்தி சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தயார்

## கிளி.அரசாங்க அதிபர்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக அறுவடை செய்யும் விவசாயிகள் தமது நெல்லை மாவட்ட நெற்களஞ்சிய சாலையில் களஞ்சியப்படுத்தி உரிய முறையில் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் இருக்கின்றன.

எனவே அதனைப் பயன்படுத்தி விவசாயிகள் உரிய சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கும் போது விற்பனை செய்ய முடியும் என மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான சந்தை வாய்ப்பு இல்லாத நிலையில் தாங்கள் நட்டத்தை எதிர்கொள்வதாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகத்தில் அறுவடை செய்யும் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் நெல் சந்தைப்படுத்தும் சபையூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கிடைப்பட்ட காலங்களில் நெல்லை அறுவடை செய்துள்ள விவசாயிகள் அதற்கான சந்தை வாய்ப்பு குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவற்றை எமது மாவட்டத்தில் உள்ள நெற்களஞ்சியசாலையில் அதாவது கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தில் அமைந்துள்ள அரச நெற்களஞ்சிய சாலையில் அதனைக் களஞ்சியப்படுத்தி அவற்றை உரிய முறையில் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மாவட்டத்திலேயே தயார் நிலையில் உள்ளன.

அதனைப் பயன்படுத்தி விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லை சேமித்து சந்தை வாய்ப்பு கிடைக்கும் சந்தர்ப்பத்தில் விற்பனை செய்ய முடியும் என தெரிவித்துள்ளார். (4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் வரலாற்று சிறப்பு மிக்க குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த பெருவிழா திருச்சுருவப்பவனி நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

# நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின்

# நடைமுறை மற்றும் கட்டுப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், அதனுடைய ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக யாழ்.மாநகர சபையினால் விளக்கமளிக்கப்பட்டது.

மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாநகர சபையில் இடம்பெற்றது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம் பெற்ற நல்லூர் மஹோற்சவம் வழமைபோன்று அதாவது 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறை இடம்பெறுமென யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.

ஓகஸ்ட் 1 ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஓகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது.

அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது.

காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கு வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்.மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ்.நகரை அடைய முடியும். ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பறத் திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

முகக்கவசங்களை அணிவது சட்டமாக்கப்படவில்லை. இருந்த போதும் கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் முகக்கவசங்களை அணிந்து தன்னெழுச்சியாக சுகாதார விதிமுறைகளை பக்தர்கள் பின்பற்ற வேண்டும்.

திருட்டுச் சம்பவங்களை தவிர்க்க நல்லூர் ஆலயச்சூழலில் யாழ்.மாநகர சபையினால் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மேலும் தெரிவித்தார். (4-33-104)

## யாழ்.பல்கலையில்

## கிறிஸ்தவக் கற்கைகளின் முதுமாணி கற்கைநெறி இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் ஏற்பாட்டில் புதிதாக 'கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி' என்ற கற்கை நெறி ஆரம்பிக்கப்படுகிறது.

இன்று 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீட மண்டபத்தில் இதன் தொடக்க நிகழ்வு இடம் பெறுகிறது.

இலங்கையில் தமிழ்மொழி மூலமாகக் கிறிஸ்தவக் கற்கைகளில் ஆரம்பிக்கப்படும் முதலாவது பட்டப்பின் முதுமாணிக் கற்கைநெறி இதுவாகும்.

உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் செ. கண்ணதாசன் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (4-104)

## மானுடம்-2022 சர்வதேச ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம் நடத்தும் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு நாளை மறுதினம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

மாநாட்டின் பிரதான ஒழுங்கமைப்பாளர் கலாநிதி. ரி.சனாதனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், ஆய்வு மாநாட்டின் பிரதம ஆசிரியர் கலாநிதி.எம்.திருவரங்கன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

மாநாட்டின் முக்கிய உரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் முதலாவது பீடாதிபதியான வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கே.இந்திரபாலா 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மனிதப் பண்பியற் கற்கைகள்: முதற் பத்தாண்டுகள் (1974 - 1984)' என்னும் தலைப்பிலும், இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுஜித் சிவசுந்தரம் 'இலங்கையில் மானுடர்களும் சூழல்களும்' என்னும் தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளனர். (4-33-104)

## இராசிபலன்

27.07.2022
ஆடி 11, புதன்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 9.56 மணிவரை
புநர்பூசம் முழுவதும்
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சந்திராஷ்டமம் - கேட்டை

வளவன்




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.




அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும்.




செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், தூரதேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.




ஆன்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் செல்லும் எண்ணம் உருவாகும், ரோக பயமுண்டு.




பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், உங்கள் செயற்பாடுகளில் மற்றவர்கள் குறை கண்டு கூறலாம், வேலைச்சுமை கூடும் நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், செய் தொழிலில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூலமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, தேவையற்ற மனச் சந்தேகங்களை தவிர்ப்பது நல்லது, செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, உறவினர் நண்பர்களின் சந்திப்புகள் கிடைக்கலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், முயற்சிகள் கைகூடும்.

வெளிக்காட்டப்படாத அன்பு முழுமையான அன்பு அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 96

### பெற்றோல் வரிசையில் நின்று பார்



உன்னை சுற்றி பயம் தோன்றும்
உலகம் வெறுக்கும்
நாளின் நீளம் விளங்கும்

பெற்றோல் வரிசையில் நின்று பார்.
உன் நிழல் விழுந்தே
நிலம் உடையும்
கால்கள் கடுக்கும்
கண்ணிரண்டும்
சொருகிக் கொள்ளும்

ஒரு மீற்றர் இத்தனை தூரமானதா?
ஒரு லீற்றர் இத்தனை் கொஞ்சமானதா?

பெற்றோல் வரிசையில் நின்று பார்.
பெற்றோல் ஷெட் கோயிலாகும்
பவுசர்காரன் தெய்வமாவான்
உன் வாயிலும் கெட்ட வார்த்தை வரும்

வரிசையில் நின்றே
வயசு போகும்
QR code ரெஜிஸ்டர் பண்ணி
வாழ்க்கை வெறுக்கும்

பெற்றோல் வரிசையில் நின்று பார்.
மனிதர்கள் மிருகம் என்பாய்
சுயநலத்தின் உருவம் என்பாய்

வேர்வை நதியாய் பெருக்கெடுக்கும்
உதடுகள் தண்ணி கேட்கும்
பெற்றோல் வரிசையில் நின்று பார்.

பூனை கூட லைனில் புகாது
ஆனால், பத்து பேர் புகுந்ததாக
சந்தேகம் கொள்வாய்
வார நாட்கள் மோசமாகும்
வார இறுதியோ நாசமாகும்

இந்த டோக்கன்
இந்த QR
இந்த நம்பர் பிளேட்
இவை எல்லாமே
உன்னை வெறுப்பேற்ற செய்த
ஏற்பாடுகள் என்பாய்

மூனு லீற்றர் பெற்றோலில்
மெய் சிலிர்க்க முடியுமே
நாள் முழுக்க அதற்காக
ரோட்டில் கிடக்க முடியுமே
அதற்காகவேனும்
பெற்றோல் வரிசையில் நின்று பார்.

நின்று கொண்டே உட்காரவும்
உட்கார்ந்து கொண்டே தூங்கவும் முடியுமே
அதற்காகவேனும்

இனிமேலாவது யோசிச்சு ஓட்டு போடுவேன்
இந்த சிஸ்டத்தை மாத்துவேன்னு
முடிவு செய்வாயே
அதற்காகவேனும்

பெற்றோல் வரிசையில் நின்று பார்!

# QR திட்டத்தின் கீழ் வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு

(கொழும்பு)

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர திட்டத்தின் கீழ் (கியூ.ஆர் முறை) வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய எரிபொருள் அனுமதி பத்திரத்திற்காக பதிவு செய்த பயனர்களின் புகார்களின் அடிப்படையில் வாரத்திற்கான எரிபொருள் ஒதுக்கீடு பின்வருமாறு அதிகரித்துள்ளது.

கார்- 20 லீற்றர்,முச்சக்கர வண்டிகள் - 5 லீற்றர், மோட்டார் சைக்கிள்கள் - 4 லீற்றர்.

இதேவேளை, தேசிய எரிபொருள் அனுமதி பத்திர முறை ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# காலிமுகத்திடல் பகுதியில் குழப்பம்

## கூடாரங்களை அகற்றுமாறு பொலிஸார் எச்சரிக்கை



(கொழும்பு)

கொழும்பு - காலிமுகத்திடல் பகுதியில் உள்ள பண்டார நாயக்கவின் உருவச்சிலையை சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்று வட்டத்திற்குள் நுழையக் கூடாது என கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்த 20 ஆம் திகதி தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் நேற்றுக் காலை குறித்த பகுதிக்கு வந்த பொலிஸார் பண்டாரநாயக்கவின் உருவச்சிலையை சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்று வட்டத்திற்குள் உள்ள போராட்டக்காரர்களின் கூடாரங்களை அகற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

அத்துடன் கூடாரங்களை உடனடியாக அகற்றாவிட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தனர்.

இதேவேளை குறித்த நீதிமன்ற உத்தரவை மீறி காலிமுகத்திடலில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சிலைக்கு அருகில் நின்றிருந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் குழப்ப நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

மேலும், பொலிஸாரின் எச்சரிக்கையை அடுத்து தற்போது போராட்டக்காரர்கள் கூடாரங்களை அகற்றும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். (நி)

# 3.4 பில்லியன் மனிதாபிமான உதவிப் பொருட்கள்

## இலங்கையிடம் கையளித்தது இந்தியா

(கொழும்பு)

இலங்கைக்கு தமிழக அரசாங்கத்திடம் இருந்து 3.4 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான மனிதாபிமான உதவிப் பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன.




குறித்த உதவிப் பொருட்கள் இந்திய உயர்ஸ்தானிகரினால் நேற்று இலங்கை அரசாங்கத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோரிடம் குறித்த உதவிப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 100 மெற்றிக் தொன்னிற்கும் அதிகமான மருந்துகள் இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த பொருட்களின் மதிப்பு 22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெவித்துள்ளது. (நி)

# சபை முதல்வராக சுசில்

## ஆளுங்கட்சி தீர்மானம்



(கொழும்பு)

பாராளுமன்றில் சபை முதல்வராக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை நியமிப்பதற்கு ஆளுங்கட்சி எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

சபை முதல்வராகச் செயற்பட்ட தினேஷ் குணவர்தன தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஆளும் கட்சியில் இருந்து விலகி சுயாதீன உறுப்பினராகச் செயற்பட்ட சுசில் பிரேமஜயந்த கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி வாக்கெடுப்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்


## அம்புலிமாமா

## மாப்பிள்ளை யாரோ?

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தக் கிழவர் சிவசங்கரனின் தந்தை. அவர் இவரது மூத்த மகன் என்றார். மாணிக்கவாசகரும் இறங்கி அந்த வீட்டினுள் மருதப்பரோடு சென்றார்.

அப்போது மருதப்பனின் மகன் தன் தந்தையிடம் "வந்து விட்டீர்களா அப்பா! பெரியப்பாவிடம் எவ்வளவு கெஞ்சியும் நீங்கள் வந்த பிறகே வரப் போவதாக பிடிவாதமாகக் கூறி விட்டார். இந்தக் கிழவரைத் தான் அவரது இரு மகன்களும் வீட்டை விட்டு விரட்டி விட்டார்கள்" என்றான்.



இதையெல்லாம் கண்ட மாணிக்கவாசகம் வண்டிக்காரனை இருக்கச் சொல்லி விட்டு மருதப்பர் கொடுத்த நீர்மோரை வாங்கிக் குடித்து விட்டுச் சற்று இளைப்பாறினார். பிறகு அவர் வண்டிக்காரனைக் கூப்பிட்டு "முருகா, இன்னும் சற்று நேரத்தில் ஊருக்குப் போகலாம் நான் அந்தப் பெரிய மனிதன் சிவசங்கரனின் வீட்டிற்குப் போகவில்லை ஆனால் என் மகளுக்கு ஏற்றவனைப் பார்த்தாகிவிட்டது" என்றார்.



அது கேட்டு மருதப்பர் ஆச்சரியப்பட்டார். அப்போது மாணிக்கவாசகம் முருகனிடம் "கிழமாடும் கிழவரும் வயதாகி விட்ட காரணம் காட்டி ஈவிரக்கம் இல்லாத அந்த சிவசங்கரன் வீட்டில் என் மகள் எப்படி வாழ முடியும்? நான் அந்த சிவசங்கரன் பெரிய பணக்காரன். எனக்கு சம அந்தஸ்து உடையவன என்று எண்ணினேன். ஆனால் பெரும் பணக்காரராக இல்லாது போனாலும் இரக்கமும் தாராள மனப்பான்மையும் கொண்ட இந்த மருதப்பர் குடும்பமே அதை விட மேல். இவரது மகனுக்கே என் மகளை மணம் செய்து வைக்க முடிவு செய்து விட்டேன். இங்கு தான் அவள் சுகமாக வாழ்வாள் என்றார்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## மாதவிப் பெண் மயிலாள்




நாட்டியத்தில் தேர்ந்தவர்களின் ஒவ்வொரு அசைவுமே நாட்டிய முத்திரையாக இருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஏழு ஆண்டுகள் தேர்ந்த இசை ஆசிரியர்களிடமும் நடன ஆசிரியர்களிடமும் பயின்றவள் மாதவி.

அவளுடைய இசை ஆசிரியன் பாவங்களையும் இராகங்களையும் மிகச் சிறப்பாக இணைக்கத் தெரிந்தவன். இசைவிற்பனர்களுக்கே சவாலாக இருக்கும் மந்திர ஸ்தாயியில் அலட்சியமாக சஞ்சரிக்க முடிந்தவன்.

அவளது நாட்டிய ஆசிரியன் எல்லா வகைக் கூத்துக்களையும் அவைகளின் நுணுக்கங்களையும் அறிந்தவன். கூத்துக்களை இசை நாடகமாக வழங்கும் திறமை படைத்தவன்.

இப்பேர்ப்பட்ட ஆசிரியர்களிடம் படித்தவள் திறமைசாலியாகத் திகழாமல் போவாளா என்ன? நாட்டியத்திலும் இசையிலும் யாழ் இசைப்பதிலும் மிகச் சிறப்பான நிலையை மாதவி எட்டினாள். மாதவி பிறந்தது "கணிகையர்" என்று அழைக்கப்படுகிற தாசி குலத்தில், இந்திரன் சபையை அலங்கரித்த ஊர்வசியின் மரபில் தோன்றியவள் அவள்.

கணிகையர், மிகப் பெரிய பணக்காரர்களை வசப்படுத்தும் நுணுக்கங்களை நன்றாக அறிந்தவர்கள். மாதவியின் தாய், அவளுடைய அரங்கேற்றத்தைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திச் சோழ மன்னனுக்கே வலை வீசினாள். அந்த விழாவுக்காக அமைக்கப் பெற்ற பாடலிலும் நடனத்திலும் சிருங்காரம் மிகச் சிறப்பாக வெளிவருமாறு ஏற்பாடு செய்தாள்.

குறித்த நாள் வந்தது. மன்னனின் முன்னிலையில் மாதவியின் அரங்கேற்றம் சிறப்பாக நடந்தேறியது.

தேர்ந்த சிற்பிகளும் தச்சர்களும் அமைத்த அழகிய மேடை. ஒலி அமைப்பும் ஒளி அமைப்பும் மிகுந்த கவனத்துடன் செய்யப்பட்டன. சந்தத்தில் பொருந்தி வருமாறு பொருட்செறிவான பாடலை பாடலாசிரியன் எழுதினான். அதற்கு மனத்தைக் கொள்ளை கொள்ளும் இசை அமைத்தான் இசை ஆசிரியன். இசைக் கருவிகளை இசைப்பவர்கள் சரியான வரிசையில் அமர்த்தப்பட்டனர். இவ்வளவு சிறப்பான பாடலும் இசையும் மாதவியின் அழகிலும் உடற்கட்டிலும் அபிநயத்திலும் மேலும் அழகு பெற்றன.

சோழ அரசன் நடனத்தைக் கண்டு மகிழ்ந்தான். மிக உயர்ந்த முத்து மாலை ஒன்றை மாதவிக்குப் பரிசாக அளித்தான். புறப்பட்டுவிட்டான்.

மாதவியின் தாய்க்கு ஏமாற்றம். தன் மகளைப்பற்றி அரசன் தன்னிடம் பேசுவான் என்று அவள் எதிர்பார்த்திருந்தாள்.

உண்மையான கலைஞர்களுக்குத் தங்கள் வித்தையின் மேல் அபரிமிதமான பெருமிதம் எப்போதுமே இருக்கும். அந்த எண்ணம், எப்படிப்பட்ட உயர்ந்த பொருளையும் தங்கள் கலைக்கு ஈடாக நினைக்காது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான வீரன் மௌனமாக வேலை செய்கிறான்.

*– விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அரசியல் மாற்றம் கண்டு பதகளிப்படையாதீர்கள்

யோகம், யாகம், ஞானம் எனும் சித்தாந்தங்களுக்கு புதுவிளக்கம் தந்தவன் பாரதி.

மக்கள் சமூகத்தின் தேவையோடு ஒட்டியதாகக் கருத்துரைத்த பாரதி, ஊருக்கு உழைத்திடல் யோகம். நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம், போருக்கு நின்றிடும்போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞானம் என்றான்.

மனம் நிதானமாக இருந்தால், அதுவே ஞானம் என்பது பாரதியின் முடிவு.

இங்குதான் நாம் ஒரு விடயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதாவது எந்தக் குழப்பங்கள் வந்தாலும் நெருக்கீடுகள் ஏற்பட்டாலும் அது கண்டு நாம் நிதானமாக இருக்க வேண்டும்.

அவ்வாறு இருக்கக் கற்றுக்கொண்டால், அது ஞானத்துக்கு ஒப்பானது.

இங்கு நாம் கூறுவதெல்லாம் இன்றைய அரசியல் களநிலைமைகள் நிச்சயம் மனித மனங்களைக் குழப்பும், நிதானத்தைக் கலைக்கும், இப்படியாயிற்றே என இதயம் ஏங்கும்.

இதனால் ஏற்படக்கூடிய பதகளிப்பு உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.

ஆகையால் இவை கண்டு நிதானத்தை இழக்காமல் மனம் கொதிக்காமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

ஏனெனில் அரசியல் என்றால், அரசியல்வாதிகள் என்றால், அங்கு குழப்பங்களும் குத்துவெட்டுகளும் நேர்மையீனங்களும் பித்தலாட்டங்களும் நிறையவே இருக்கும்.

அவற்றை நேர்மையுடன் பார்ப்பவர்களுக்கு நெஞ்சு பொறுக்கமாட்டாது.

உண்மை இதுகாறும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது அவரை நிராகரித்துள்ளது.

அதேநேரம் வடக்கு மாகாண முதலமைச்சராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இருந்தபோது அன்று பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பக்கம் நின்றுகொண்டு நீதியரசர் விக்னேஸ்வரனை ஓரங்கட்டினார்.

ஒருமுறை தந்தித் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த ரணில் விக்கிரமசிங்க; நான் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் ஒரு போதும் கதைக்கவில்லை. கதைக்கவும் மாட்டேன். அவருடன் கதைக்க வேண்டிய தேவையும் எனக்கில்லை என்றார்.

ரணில் விக்கிரமசிங்கவின் மேற்போந்த பதில் தந்திச் செய்தியாளரைத் திகைக்க வைத்தது.

அன்று பிரதமராக இருந்த ரணில் அன்றைய வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பில் இவ்வாறு கூறியமை தமிழ் மக்களின் மனங்களைக் கொதிப்படையச் செய்தது.

ஆனால் இன்று ஜனாதிபதி தெரிவில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து பாராளுமன்ற உறுப்பினரான சி.வி.விக்னேஸ்வரன் வாக்களித்துள்ளார்.

அதேநேரம் ரணிலுடன் மிக நெருக்கமாக நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்சமயம் எட்ட நிற்கிறது.

ஆக, இதுதான் அரசியல் என்பதை நாம் புரிந்து கொண்டு நிதானமாக இருப்பதுதான் எங்களைப் பாதுகாப்பதற்கான ஒரே வழியாகும்.

# மதகுருமார்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு நுணாவில் ஐ.ஓ.சி.யில் எரிபொருள்

(சாவகச்சேரி)

வடமாகாணத்தில் உள்ள சர்வ மதகுருமார்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு இன்று புதன்கிழமை நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கி வைக்கப்படும் என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் மாற்றுத்திறனாளிகள் மருத்துவமனை செல்வதற்கும், தமது வாழ்வாதாரத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதே போன்றே மதகுருமார்களும் தமக்குத்தேவையான எரிபொருளை பெற முடியாத நிலையில் உள்ளனர்.

இதனைக் கருத்திற் கொண்டு மதகுருமார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் சைக்கிளுக்கு 2000 ரூபாவுக்கும், முச்சக்கரவண்டிக்கு 2500ரூபாவுக்கும், கார்களுக்கு 3000 ரூபாவுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார். (4-30)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல் 2022

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள யாழ்.நகர் II பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்று 27 ஆம் திகதி முற்பகல் 8.30 இற்கு அத்தியடி பிள்ளையார் கோவிலடி அத்தியடி, முற்பகல் 10.15 இற்கு ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக, பிற்பகல் 12.15 இற்கு நாவலர் மண்டபம் நாவலர் வீதி, 28 ஆம் திகதி முற்பகல் 8.30 இற்கு இராசாவின் தோட்ட வீதி ஸ்ரான்லி வீதி சந்தி, முற்பகல் 10.15 இற்கு கோவில் வீதி றக்கா வீதி சந்தி, பிற்பகல் 12.15 இற்கு மருதடி லேன் வைரவர் கோவிலடி, 29 ஆம் திகதி முற்பகல் 8.30 இற்கு நல்லூர் தெற்கு சனசமூக கற்பகப் பிள்ளையார் கோவிலடி, முற்பகல் 10.15 இற்கு றக்கா வீதி இளம் சிங்கம் சனசமூக நிலையம், பிற்பகல் 12.15 இற்கு கோவில் வீதி ஆஸ்பத்திரி வீதி, 30 ஆம் திகதி 8.30 இற்கு மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையம், முற்பகல் 10.15 இற்கு அருள் மாதா கோவிலடி இராசாவின் தோட்டம், முற்பகல் 11.30 இற்கு மாட்டின் வீதி சப்பல் வீதி சந்தி, 1 ஆம் திகதி 8.30 இற்கு 2 ஆம் குறுக்குத்தெரு வேம்படி வீதி யாழ்ப்பாணம், முற்பகல் 10.15 இற்கு OLR. தேவாலயம் 4 ஆம் குறுக்குத்தெரு, பிற்பகல் 12.15 இற்கு யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடி, 3 ஆம் திகதி 8.30 இற்கு கோவில் வீதி ரயில் தண்டவாளச் சந்தி, முற்பகல் 10.15 இற்கு ஆஸ்பத்திரி வீதி கோவில் வீதிச் சந்தி, பிற்பகல் 12.15 இற்கு சோமசுந்தரம் வீதி, 4 ஆம் திகதி 8.30 இற்கு பழைய பூங்கா வீதி, முற்பகல் 10.15 இற்கு சுபாஸ் லேன், பிற்பகல் 12.15 இற்கு கொழும்புத்துறை வீதி விதானையார் வீதிச் சந்தி, 5 ஆம் திகதி 8.30 இற்கு சந்தனமாதா கோவில் பகுதி, முற்பகல் 10.15 இற்கு கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பிற்பகல் 12.15 இற்கு குருசோ வீதி கிறின்பில் வாசிகசாலை, 6 ஆம் திகதி 8.30 இற்கு மத்தியுஸ் வீதி சென்சாள்ஸ் ஆரம்பப் பாடசாலை, முற்பகல் 10.15 இற்கு காட்டு கந்தோர் ஒழுங்கை, முற்பகல் 11.30 இற்கு கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதி சந்தி ஆகிய இடங்களில் வைத்து ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களின் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அத்துடன் ஒரு நாய்க்கான உரிமம் கட்டணமாக 50 ரூபா அறிவிடப் படும் என யாழ்.மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

(அளவெட்டி)

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் 112 ஆவது நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல்2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு. லங்காதீபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-110)

# ஆடி அமாவாசையை முன்னிட்டு விசேட அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு நாளை 28 ஆம் திகதி கீரிமலை சிவபூமி மடத்தில் காலை 10 மணியளவில் விசேட பூசை நிகழ்வுகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து 11 மணியளவில் அன்னதான நிகழ்வும் நடைபெறும். (4)

# மாவிட்டபுரம் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா

(குப்பிழான்)

அபிஷேகக் கந்தன் எனப் போற்றிச் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் காம்யோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்குச் சிறப்பாக இடம்பெற உள்ளது.

நாளை வியாழக்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று அதி காலை 5.30 மணியளவில் மாவிட்டபுரம் கந்தப்பெருமான் வீதி உலாவாகப் புறப்பட்டுக் காலை 6.30 மணியளவில் கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (4-18)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை 28 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மயிலியதனை, சிதம்பரா கல்லூரி, தொண்டைமானாறு ஆகிய இடங்களிலும் [illegible] சிறுவர் இல்லம், மகாறம்பைக்குளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, முள்ளிக்குளம் கடற்படை முகாம், மூர் வீதி, முள்ளிக்குளம், இளையோர்சேவை மையத்தடி, யு.சி மைதானம்-மன்னார் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கணேசபுரம், முத்து விநாயகபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## யாழ்.பல்கலைக்கழக

# இந்துக் கற்கைகள் பீட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வின் அறிமுக வைபவம் இன்று 27 ஆம் திகதி காலை 8 மணி முதல் நடைபெறும்.

க.பொ.த உயர்தர 2019 ஆம்ஆண்டுகலைப்பிரிவில் தோற்றிப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கலைப் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சுமார் 50 மாணவர்கள் இந்துக் கற்கைகள் பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வியாண்டுக்காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வே இன்று 27 ஆம் திகதி புதன்கிழமை காலை அறிமுக வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 37

தீவிர இராஜதந்திர அழுத்தம் தொடர்ந்தது. உக்ரைன் மேற்கத்தேய ஊடகங்களில் ஏதோ ஒரு முரட்டு அரசாக சித்தரிக்கப்பட்டது. இறுதியாக, மே 1992 இல் உக்ரைன் லிஸ்பன் நெறிமுறையில் கையெழுத்திட்டது. அமெரிக்காவால் நடத்தப்பட்ட அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகள், ஜனவரி 1994 இல் ஒரு முத்தரப்பு அறிக்கையை (அமெரிக்கா, ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே) விளைவித்தது. இது நிராயுதபாணியாக்கத்திற்கான கால அட்டவணையை கோடிட்டுக் காட்டியது மற்றும் உக்ரைன் எழுப்பிய நிதி மற்றும் பாதுகாப்பு சிக்கல்களைக் கையாண்டது.

**ஒரு பார்வையில் உக்ரைன், அணு ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்கள்**

1991 இல் சோவியத் யூனியனில் இருந்து உக்ரைன் சுதந்திரம் பெற்ற நேரத்தில், உக்ரைன் உலகின் மூன்றாவது பெரிய அணு ஆயுதக் களஞ்சியத்தை வைத்திருந்தது. இதில் 1,900 மூலோபாய போர்க்கப்பல்கள், 176 கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் (ICBMகள்) மற்றும் 44 மூலோபாய குண்டுவீச்சுகள் அடங்கும். 1996 வாக்கில், உக்ரைன் தனது அணு ஆயுதங்கள் அனைத்தையும் பொருளாதார உதவி மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்களுக்கு ஈடாக ரஷ்யாவிடம் திருப்பிக் கொடுத்தது.

மேலும் டிசெம்பர் 1994 இல், உக்ரைன் அணு ஆயுதம் அல்லாத 1968 அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் (NPT) ஒரு நாடாக மாறியது. உக்ரைனில் கடைசியாக அணுசக்தி விநியோக வாகனம் 1991 மூலோபாய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தின் (Strategic Arms Reduction Treaty- START) கீழ் 2001 இல் அகற்றப்பட்டது. உக்ரைனிலிருந்து ஆயுதங்கள் மற்றும் அணுசக்தி உட்கட்டமைப்பை அகற்ற 1992 இல் லிஸ்பன் நெறிமுறையில் தொடங்கி பல ஆண்டுகள் அரசியல் மற்றும் இராஜதந்திர வேலைகள் தேவைப்பட்டன.

**1990 இறையாண்மை பிரகடனம்**

சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சியில், உக்ரைனிலிருந்த சுதந்திரத்திற்கான இயக்கம், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NPT இல்) அணு ஆயுதம் இல்லாத நாடாக இணைவதற்கான முயற்சிகளை ஆதரித்தது. ஜூலை 16, 1990 அன்று அதன் இறையாண்மைப் பிரகடனத்துடன் உக்ரைன் "அணு ஆயுதங்களை ஏற்கவோ, உற்பத்தி செய்யவோ அல்லது பெறவோ மாட்டோம்" என்று உறுதியளித்தது. இருப்பினும், இந்த பொது அர்ப்பணிப்பு இருந்தபோதிலும், உக்ரைனிய அரசியல்வாதிகள் இந்த யோசனையால் முழுமையாக ஒன்றிணைக்கப்படவில்லை . சிலர் ரஷ்யா இன்னும் ஒரு நிலையானது என்று கருதினர். ஒரு அச்சுறுத்தல் மற்றும் அவர்கள் ஆயுதங்களை ஒரு தடுப்பாக வைத்திருக்க வேண்டும் என்றும் கருதினர்.

**1991 மூலோபாயப் படைகள் மீதான மின்ஸ்க் ஒப்பந்தம்**

அனைத்து அணு ஆயுதங்களுக்கும் ரஷ்ய அரசாங்கத்தின் பொறுப்பை வழங்குவதாக ஒப்புக்கொண்டது. இவ்வாறு ரஷ்யா பொறுப்பை எடுத்துக் கொண்டாலும் பெலாரஸ், உக்ரைன் மற்றும் கஜகஸ்தானில் ஆயுதங்கள் இருக்கும் வரை, அந்த நாடுகளின் அரசாங்கங்கள் அவற்றைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கும். ஆயுதங்களை அந்நாடுகளிலிருந்து அகற்றுவதற்கான இலக்கு திகதி 1994 இன் இறுதி என நிர்ணயிக்கப்பட்டது.

**சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டவுடன், கொமன் வெல்த் சுதந்திர நாடுகள் டிசெம்பர் 30, 1991 இல் அனைத்து அணு ஆயுதங்களுக்கும் ரஷ்ய அரசாங்கம் பொறுப்பு கூறும் என்ற மின்ஸ்க் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.**

**1992 லிஸ்பன் நெறிமுறை**

மே 23, 1992 இல் உக்ரைன் லிஸ்பன் நெறிமுறையில் (Lisbon Protocol) கையெழுத்திட்டது. பெலாரஸ், கஜகஸ்தான் மற்றும் உக்ரைனில் உள்ள அணு ஆயுதங்களை ரஷ்யாவிடம் திருப்பி அனுப்ப நெறிமுறை முயன்றது. அனைத்து மாநிலங்களும் START மற்றும் NPT இல் சேர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும்,நெறிமுறை உக்ரைன் NPTயை எவ்வளவு விரைவாகக் கடைப்பிடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கடைப்பிடிக்க வேண்டும், ஆனால் அதற்கு ஏழு ஆண்டுகள் வரை சென்றது.

**உக்ரைனுக்குள், START இன் ஒப்புதல், NPT இல் இணைதல் அல்லது ஒட்டு மொத்த அணு ஆயுத ஒழிப்பு ஆகியவற்றின் செயற்பாட்டில் சிறிய தடுமாற்றம் இருந்தது**

1992 இன் பிற்பகுதியில், உக்ரைனிய பாராளுமன்றம் அணுசக்திக்கு ஆதரவான கருத்துக்களைக் குரல் கொடுத்தது. உக்ரைன் குறைந்தபட்சம் தற்காலிக அணு ஆயுத அந்தஸ்துக்கு தகுதியுடையது என்று சிலர் நம்பினர். ஓரளவு நம்பிக்கையுடன், அமெரிக்க அரசாங்கம் உக்ரைனுக்கு 175 மில்லியன் டொலர்களை அணு ஆயுதங்களை அகற்றும் உதவிக்கு உறுதியளித்தது. ஆனால், உக்ரைனிய அரசாங்கம் அணு சக்திகளின் நிர்வாகத்தை செயற்படுத்தத் தொடங்கியது மற்றும் போர்த் தளபாடங்களின் உரிமையைக் கோரியது.

(தொடரும்)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: சூரி 11 செவ் 2 இல்
உயரம்: 5'4'
தகைமை/தொழில்: O/L சாரதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12826

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருகோணம் 4
கி.பா: 11 1/2 சூரி 12 செவ் 4 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: O/L (உணவுச்சாலை)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்/ சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12827

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சித்திரை 3
கி.பா: சூரி 6 செவ் 12 இல்
உயரம்:5'1"
தகைமை/தொழில்: BA பட்டதாரி கிராம உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச தொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12830

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம் : அவிட்டம் 3
கி.பா: சூரி., செவ் 1 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்: வாகன பெறுமதி மதிப்பீட்டாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு : வெளிநாடு மட்டும்
தொ.இ: B/12831

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1996 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 2
கி.பா: சூரி .செவ் 7 இல்
உயரம்:5'7"
தகைமை/ தொழில்: BSc (பௌதீக விஞ்ஞானம்) திட்ட மேலாளர் ஆய்வுகள்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/12833

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: 34 1/2 சூரி 4 செவ் 12 இல்
உயரம்: 165 cm
தகைமை/தொழில்: BSc ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: G/12836

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: 69 1/2 சூரி 7 செவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc Civil Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/12837

பிறப்பு:1993 கிறிஸ்தவம் RC
உயரம்:5'5"
தகைமை/ தொழில்:கல்வியற்கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சாதாரண அரச தொழில்
தொ.இ:G/12838

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## தாய்வான் விவகாரம்

# சீனா- அமெரிக்கா இடையே மீண்டும் மோதல் போக்கு

(தைபே)

அமெரிக்க பாராளுமன்ற அவைத் தலைவர் நான்சி பெலோசியின் உத்தேச தாய்வான் பயணத் திட்டத்திற்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

நான்சி பெலோசியின் தாய்வானுக்கான பயணத்தை தொடர அமெரிக்கா வலியுறுத்தினால் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க உறுதியான மற்றும் வலுவான நடவடிக்கைகளை சீனா எடுக்கும் என்று சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பீஜிங்கில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது தெரிவித்தார்.

பெலோசியின் தாய்வானுக்கான உத்தேச பயணத்திற்கு எங்களின் உறுதியான எதிர்ப்பை அமெரிக்கத் தரப்பிற்கு பலமுறை சீனா தெளிவுபடுத்தியுள்ளது.

சீனாவுடனான பதற்றங்களுக்கு மத்தியில் தாய்வான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தீவிர இராணுவப் மற்றும் கடற்படை பயிற்சியில் ஈடுபட்டது.

தாய்வான் தலைநகர் தைபேயில் போர் விமானங்கள் பறந்து பயிற்சியில் ஈடுபட்டன. தரைப்படை, கடற்படை பயிற்சியும் நடத்தப்பட்டது. இது ஆண்டு தோறும் நடைபெறும் வழக்கமான பயிற்சிதான் என தாய்வான் தெரிவித்தாலும், சீனாவின் எச்சரிக்கையை தொடர்ந்தே இந்தப் பயிற்சி நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே சீன இராணுவ விமானங்கள் தைவான் வான் எல்லை அருகே அடிக்கடி பறந்து அச்சுறுத்துகின்றன. அண்மையில் ரஷ்யா-உக்ரைன் இடையே ஏற்பட்டுள்ள போர் போன்று, கிழக்கு ஆசியாவிலும் ஏற்படலாம். இவை அனைத்தும் நாங்கள் விழிப்புடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன என தைபே மேயர் கோ வென்-ஜே செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாய்வானை தனது நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீனா கூறிவருகிறது. அந்த நாட்டின் சுதந்திரம் அல்லது அங்கீகாரம் குறித்து எந்த நாடு பேசினாலும் அதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

எனினும் தாய்வான் எந்த நாட்டின் பகுதியும் இல்லை. நாங்கள் சுதந்திர அரசு என தாய்வான் தொடர்ந்து கூறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவி கொட்டி...

உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விறகு எடுப்பதற்காக மேற்படி குடும்பப் பெண் அயலில் உள்ள பகுதிக்கு சென்றபோது வீழ்ந்து இருந்த பனை ஓலையில் இருந்த கருங்குளவிகள் மூன்று அவரின் தலையில் கொட்டிய வாறு விடுபடாமல் இருந்துள்ளது. சுதாகரித்துக்கொண்டு அவர் வீட்டுக்கு ஓடி வந்தபோது அவரின் மகள் குளவிகளை அகற்றி உடனடியாக ஊரணி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் அங்கு மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-60)

## +5 பேர் மரணம்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் நாளொன்றில் பதிவான அதிகபட்ச தொற்று நோயாளர் தொகை இதுவாகும்.

இதேவேளை, நேற்று உறுதிப்படுத்தப்பட்ட 119 தொற்று நோயாளர்களுடன் இலங்கையில் மொத்த கோவிட் நோயாளிகளின் எண்ணிக்கை 665, 094 ஆக அதிகரித்துள்ளது.


நேற்று முன்தினம் நாட்டில் 5 கோவிட் மரணங்கள் பதிவானதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதி செய்துள்ளார்.

இவற்றுடன் இலங்கையில் மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 16,544 ஆக அதிகரித்துள்ளது. (ம)



















## இரு நாடுகளுக்...

ஒன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்ததாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது, நாட்டில் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தொடருந்து உள்ளிட்ட போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்க இந்திய உயர்ஸ்தானிகர் ஒப்புக்கொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத் துறையில் விரைவான முதலீடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம)

## முன்பதிவு...

படும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக விண்ணப்பதாரிகள் www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக தமக்குரிய காலம் மற்றும் திகதியினை முற்கூட்டியே பதிவு செய்வதன் ஊடாக தேவையற்ற அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## நாட்டின்...

(ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் நேற்று பிற்பகல் முக்கிய சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்தும் கலந்துகொண்டார். (ம)

## விமானத்தில்...

டனிஸ் அலி என்கிற சிவில் செயற்பாட்டாளரே இவ்வாறு டுபாய் நோக்கிப் பயணிக்கவிருந்த விமானத்தின் உள்ளே வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

"எனக்கு எதிராகப் பயணத்தடை இருக்குமாக இருந்தால் விமானத்துக்குள் வருவதற்கு முன்னதாக விமான நிலையத்தில் வைத்து தன்னை கைது செய்திருக்கலாமே. கைது செய்வதற்கான ஆவணங்கள் இருந்தால் அதிகாரிகள் அதனைக் காண்பிக்க வேண்டும்" எனவும் தான் கைது செய்யப்படும்போது அதிகாரிகளிடம் டனிஸ் அலி கோரினார்.

இதற்கு எதற்கும் பதிலளிக்காத அதிகாரிகள் விமானத்தின் உள்ளே ஆசனத்தில் அமர்ந்திருந்த டனிஸ் அலியை கைது செய்து இழுத்துச் செல்லும் வீடியோ சமூகவலைத்தளங்களில் தற்போது வைரலாகி வருகிறது. (ம)

## பொருளாதார...

தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மக்களின் பரஸ்பர நலனுக்காக ஜனாதிபதியுடன் நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்திருப்பதாக இந்தியப் பிரதமர் மீண்டும் வலியுறுத்துவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சீன ஜனாதிபதி ஸீ பின் ஜிங், முன்னதாக வாழ்த்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை தீர்க்...

கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிபுணர்கள் மற்றும் கொள்கை நிபுணர்களுடனான விசேட சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள்தொடர்பிலும் அமெரிக்கத் தூதுவர் விளக்கமளித்துள்ளார்.

பொருள்தாரஸ் திரத்தன்மையை மீட்டெடுக்கவும் இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தீர்க்கமான நடவடிக்கை அவசியம் என்றும் அவர் கூறினார்.

முன்னோக்கி செல்லும் பாதை மற்றும் பரந்த அடிப்படையிலான, நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தத் தேவையான அவசர சீர்திருத்தங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ம)

## போராட்ட பின்...

என விமானப்படையின் முன்னாள் அதிகாரியான கீர்த்தி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு சிங்கள பௌத்த மக்கள் மீது கோபம் இருப்பதாகவும் காலி முகத்திடல் போராட்டம் என்பது போராட்டம் அல்ல அது பயங்கரவாதம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இணையத்தள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கீர்த்தி ரத்நாயக்க இதனைக் கூறியுள்ளார். (ம)

## முடிவுக்கு...

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தற்போது அரசாங்கம் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதற்காக லிட்ரோ நிறுவனம் தொடர்ச்சியாகக் கூடி இம் மாதத்திற்குள் எரிவாயு தட்டுப்பாட்டை முற்றாக முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.


இதன்படி, வரிசையின்றி எரிவாயுவை பெற்றுக்கொள்ளும்முடியும்என அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 63 வயது பெண்ணை காட்டுக்குள் கடத்திச் சென்ற 15 வயது சிறுவன்

## யாழ். பொன்னாலையில் சம்பவம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை காட்டுப் பகுதிக்குள், 63 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவரை 15 வயதுச் சிறுவன் கடத்திச் சென்று வன்புணர முயன்றுள்ளான். இதன்போது குறித்த வயோதிபப் பெண்மணி தப்பித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த வயோதிபப் பெண்மணி நேற்று முன்தினம் மீன் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தவேளை எதிரே வந்த சிறுவன் அந்த பெண்மணியின் உறவினர் ஒருவரது பெயரைச் சொல்லி அவரை தெரியும் எனக் கூறினான்.

அதன்பின்னர் அந்தப் பெண்மணியை வீட்டில் விடுவதாக கூறி சைக்கிளில் ஏற்றி காட்டுப் பாதை வழியாக சென்றுள்ளான்.

"எனது வீட்டிற்கு செல்லும் பாதை இதுவல்ல" என அந்தப் பெண் கூறியவேளை இந்தப் பாதையாலும் செல்லலாம் எனக் கூறிய சிறுவன் நடுக்காட்டினை சென்றடைந்தான்.

அதன்பின்னர் தனது சட்டையினை கழற்றி அந்த பெண்ணின் கழுத்தை இறுக்கி, வன்புணர முயன்றுள்ளான். உடனே தன்னை சுதாகரித்துக்கொண்ட பெண் தனது சகோதரன் இந்த பக்கமாக தான் வந்துள்ளான் என்று கூறிசகோதரனது பெயரை சொல்லி கூச்சலிட்டார். இதன்போது குறித்த சிறுவன் அவ்விடத்தில் இருந்து தப்பித்துச் சென்றுள்ளான். இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் நேற்றையதினம் அச்சிறுவனை கைது செய்துள்ளனர். (ம-104)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு பொலிஸ் இழப்பீடு வழங்க வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

கடந்த மே மாதம் 09 ஆம் திகதி மைனா கோ கம மற்றும் கோட்டா கோ கம போராட்ட களங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொலிஸ் இழப்பீடு வழங்க வேண்டும் என்று மனித உரிமை ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

அலரிமாளிகையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றுக்கு பின்னர், அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்த வந்திருந்தவர்களை கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ தவறிய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளில் இருந்து கடமையில் ஈடுபட்டிருந்த அனைத்து அதிகாரிகள் தொடர்பாகவும் விசாரணை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் மே 9 ஆம் திகதி தாக்குதலின்போது பொலிஸ்மா அதிபர் அமைதியான போராட்டக்காரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் தவறியுள்ளதாகவும் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. (ம)

# அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க சஜித் அணி முடிவு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் மற்றும் செயற்குழுக் கூட்டம் என்பன நேற்று கூடி பின்வரும் முடிவுகளை எட்டின.

01). கருத்துத் தெரிவிக்கும் உரிமை போராட்டம் நடத்துவதற்கான உரிமை மற்றும் மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தும் உரிமைகளை ஒடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

02). மக்கள் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்காமல் அரச பயங்கரவாதத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறை அரசாங்கத்துடன் கூட்டுச் சேராதிருப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

03). பாராளுமன்ற ஜனநாயக அமைப்பில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக பாராளுமன்றத்தில் குழு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டால், அதற்கு ஆதரவளிப்பது என தீர்மானிக்கப்பட்டது. (ம)

# பல்டியடித்தார் தம்மிக்க பெரேரா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட தம்மிக்க பெரேரா தொடர்ந்தும் அந்தப் பதவியில் நீடிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மிக்க பெரேரா பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக தாம் இதுவரை அறிவிக்கவில்லை என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

எனவே, அவர் வெளியேறிய பின்னர் யாரை நியமிப்பார்கள் என்பதை இப்போது கூற முடியாது எனவும் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ம)


## காணி விற்பனைக்கு

நாவற்குளி சந்தியில் புகையிரத நிலையத்துக்கு நேர்முன்னாக A32, A9 இணையும் பிரதான வீதியில் 2 1/2 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உள்ளது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(C-4660) 074 296 1634

## வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம் - 04.09.2022 நாட்கள் - 12

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, புத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வநாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்மபுரீஸ்வரர் சிவன், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்.

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு: (12234)

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் T.P: 077 768 0102

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் 07 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- யாழ். நகரத்தில் இருந்து 4 Km தூரத்தில் அமைந்துள்ளது
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- நல்ல தண்ணீா் ஊற்றுச் சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மலை 6.00 மணிரை

ஜெயம்: தரகர் தேவையில்லை (12249)

077 814 7389, 077 241 7589

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாளர், றொட்டி வேலையாள், கொத்து, பிறைட்றைஷ் தயாரிப்பவர், உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்) போன்ற பணி நிலைகளுக்குரிய பணியாளர்கள் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு நேரில் வருகைதரவும்.

077 649 1027 (C-4665)

சாயிராம் மருந்தகம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

## மணமகள் தேவை

பிறந்த திகதி : 13.08.1979
நட்சத்திரம் : அச்சுவினி
லண்டனில் வசிக்கிறார். P.R உண்டு
சொந்தமாக தொழில் செய்கிறார்.
கல்வித் தகைமை : Jaffna B.Sc
London M.Sc
சைவபோசனம் விரும்பத்தக்கது.
லண்டனில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. (C-4664)

077 334 6692, 077 880 0353

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 72 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம். (12264)

பார்வையிடும் நேரம்
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதான உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
தொடர்பு (12258)

Call/ Whatsapp/ Viber no
071 205 2795

## வேலையாட்கள் தேவை

வீடியோர் எடிட்டிங்,
வீடியோ படப்பிடிப்பாளர்
(Cameraman)
வேலைக்கு ஆட்கள் தேவை. (12266)

077 102 0070

## SMART SCIENCE CENTER

நீராவியடி

பௌதிகவியல்
T.K. KAJAN B.Sc
T.P : 077 653 1177

இணைந்த கணிதம்
T.S. RANKAN B.Sc, PGDE
T.P : 077 622 2298 (12265)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4659)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org